# மானக்கஞ்சாற நாயனாரின் பக்தி திறன்

*திருமதி ஜெ. சவிதா*
உதவிப்பேராசிரியர்
முதுகலை மற்றும் தமிழ் உயராய்வு மையம்
ஜி.டி.என் கலைக்கல்லூரி, திண்டுக்கல்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5037

## முன்னுரை

தமிழகத்திலே சைவத்தையும் தமிழையும் வளர்த்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் அறுபத்து மூன்று நாயன்மார்களாவர். திருக்கோயில் வழிபாட்டிற்கும், சைவத்திற்கும் அடித்தளமான அருந்தமிழ் நூல்களை ஆக்கியவர்கள் சமய குரவர் நால்வரே. இவர்களையன்றிப் பெண்பாலர் போற்றத்தக்க பெருமை உடையவர் காரைக்கால் அம்மையாராவர். ஏனைய நாயன்மார்கள் இறைவனைப் பாடல்களால் பாடிப்பணியாது தம் வழிபாட்டால் மக்களுக்கு வழிகாட்டிகளாக இலங்கினர். இவர் தம் சமயப்பணித் தமிழ்ப்பணியோடு இயைந்தது. அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் ஒரு முழுமை கொடுத்தவர் சுந்தரமூர்த்தியாவார். அவருடைய திருத்தொண்டத் தொகையை அடியொற்றிச் சைவமும் தமிழும் தழைத்தன. திருத்தொண்டத் தொகையை அடியொற்றி விரியாக அமைந்தது நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டத் திருவந்தாதி ஆகும் இவ்விரு நூல்களையும் அடிப்படையாகக் கொண்டு விரிவாகவும், முழுமையாகவும் திருத்தொண்டர் வரலாற்றைச் சேக்கிழார் பெருமான் உருவாக்கினார். சைவ சமய வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் திருத்தொண்டர் புராணம் குறிப்பிடத்தக்கது. பிற்காலத்தவர்கள் திருத்தொண்டர் புராணத்திலுள்ள ஒவ்வொரு பகுதியும் தனித்தனிக் கதையாக எடுத்தியம்பப்பட்டுள்ளது. இந்த திருத்தொண்டர் புராணத்தில் உள்ள 63 நாயன்மார்களில் ஒருவரான மானக்கஞ்சாறு நாயனாரின் பக்தி திறத்தைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## சைவ சமயம்

சைவ சமயம் என்பது சிவபெருமானை முழு முதற்கடவுளாக வணங்கும் சமயமாகும். சைவம் சிவனுடன் சம்பந்தமாவது என திருமூலர் திருமந்திரத்தில் குறிப்பிடுகிறார். சிவ வழிபாட்டினை சிவநெறி என்றும் சைவ நெறி என்றும் கூறலாம் சைவ சமயத்தினை சுருக்கமாக சைவம் என்று அழைக்கின்றார்கள்.

பழந்தமிழர்களின் ஐந்நிலத் தெய்வமான சேயோன் (சிவந்தவன்) சிவனாக (சிவந்தவன்) மாறியதையும், சேயோன் வழிபாடே சிவன் வழிபாடாக மாறியதையும், இம்மதத்தினை சிவ மதம் என்றும் தமிழர் சமய நூலில் பாவணார் குறிப்படுகிறார். இச்சமயம் உலகில் தோன்றிய முதல் சமயமென என்று கூறப்பெறுகிறது.

இந்து சமயப் பிரிவுகளான வைணவம், சாக்தம் கௌமாரம், காணாபத்தியம், சௌரம் முதலிய பிற பிரிவுகளை தன்னுள் எடுத்துக் கொண்ட இச்சமயம் இந்து சமயப் பிரிவுகளுள் முதன்மையானதாக கொள்ளப் பெறுகிறது. இம்மதத்தினை இருநூற்று இருபது மில்லியன் மக்கள் பின்பற்றுகின்றனர். பக்தி இலக்கிய காலத்தில் சைவம் தமிழுக்கு பெரும் சேவை செய்து சைவத்தமிழ் என்று பெயர் கொண்டது. இதற்கு நாயன்மார்களும், சமயக் குரவர்களும் பெரும் உதவி செய்தனர்.

## நாயன்மார்கள்

நாயன்மார்கள் என்போர் பெரிய புராணம் எனும் நூலில் குறிப்பிடப்படும் சைவ அடியார்கள் ஆவர். நாயன்மார் எண்ணிக்கை அடிப்படையில் 63 நபர்கள் ஆவார்கள். சுந்தரமூர்த்தியார் திருத்தொண்ட தொகையில் 60 சிவனடியார்கள் பற்றி குறிப்பிட்டுள்ளார். அந்த நூலினை மூலமாக கொண்டு சேக்கிழார் பெரிய புராணத்தினை இயற்றினார். அவர் திருத்தொண்டர் தொகையை எழுதிய சுந்தரமூர்த்தியாரையும் அவரது பெற்றோர் சடையனார், இசைஞானியார் ஆகிய மூவரையும் நாயன்மார்களாக இணைத்துக் கொண்டார்.

நாயன்மார்கள் என்போர் சைவ அடியார்கள் தனக்கென யாதும் வேண்டாதவர்கள் சிவபெருமான் கொடுத்த சோதனைகளை தாண்டி தனக்கு இறையருள் ஒன்றே போதும் என்று சாதித்துக் காட்டிய சிவப் பழங்கள் என்று சொன்னால் மிகையில்லை நாயன்மார்கள, தினம் மூன்று வேளை கோயிலுக்குப் போவார்கள் ஆனால் சிவபெருமானைப் பார்த்துப் பொன்னைக் கொடு, பொருளைக் கொடு, எனக்கு செல்வத்தைக் கொடு, மக்களைக் கொடு, என்று ஒரு நாளும் கேட்க மாட்டார்கள் நாயன்மார்கள் ஆண்டவனிடத்திலே இது வரை ஒன்றையும் கேட்டதில்லை. அதனால் அவர்கள் பெரியவர்கள்.

## நாயன்மாரில் பெண்கள்

அறுபத்து மூன்று நாயன்மாரில் மூவர் பெண்கள். கி.பி. 3-4 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த காரைக்கால் அம்மையார் நாயன்மாரில் காலத்தால் மூத்தவர். தான் பிறந்து வாழ்ந்த ஊரின் பெயராலேயே அறியப்படும் காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர் புனிதவதியார் ஆகும். மதுரையை ஆண்ட கூன் பாண்டியன் என்ற பாண்டிய மன்னன் நின்ற சீர் நெடுமாற நாயனார் என்ற அறியப்படுகிறார். அவர் மனைவி மங்கையர்க்கரசியார் என்பவர் நாயன்மாரில் மற்றொரு பெண் ஆவார் திருநாவலுரைச் சேர்ந்த சடையனார் என்ற நாயனாரின் மனைவி இசைஞானியார் மூன்றாவது பெண் நாயனார் ஆவார். இவர்களின் மகன் சுந்தரமூர்த்தியார் சைவக்குரவர் நால்வருள் ஒருவரும் நாயன்மாரில் ஒருவரும் ஆவார்.

கஞ்சாறு நாட்டின் வளம்

> **“கோலாறு தேன் பொழியக் கொழுங் கனியின் சாறு ஒழுகும்**
> **காலாறு வயல் கரும்பின் கமழ் சாறூர் கஞ்சாறூர்”[1]**

நீர்பாயும் வயல்களையும், கரும்புச் செடிகளையும் கொண்ட இயற்கை வளம் பொருந்த விளங்கியது கஞ்சாறுர். தாமரை மலரும், கழுநீர் மலரும் புத்திருக்கும் தண் ணீரை வணங்குவது போல விளைந்த நெல் வளைந்திருக்கும் வயல்களைக் கொண்டது கஞ்சாறூர். அங்குள்ள வயல்களில்

உழத்தியர் கூந்தலால் மேகத்தையும், நடையால் மயிலையும், முகத்தால் முயல்-மறு கொண்ட மதியத்தையும் தோற்கடிப்பர். வயலில் விளைந்துள்ள நெல் பாக்கு மரத்தின் கழுத்தை உரசும். உழவர் பாக்குக் குலைகளை கொடுவாளால் வெட்டி எடுப்பர். உயர்ந்த மதிலும் ஒளி பொருந்திய மாடங்களும் வினங்க அவற்றில் அழகான கொடிகளும் தோழணங்களும் ஆடி அசைந்து கொண்டிருக்கும் தோரணமும் புரண-கும்பமும் தெருக்களில் வைக்கப்பட்டிருக்கும் சிறப்புடையது அவ்வூர். கஞ்சாறு - இப்பொழுது ஆனதாண்டவபுரம் என வழங்கி வருகிறது. இது ஆனந்த தாண்டவபுரம் என்பதன் மரூஉவாகும். மயிலாடுதுறைக் குக் கிழக்கே அமைந்துள்ளது.

**மானக்கஞ்சாற நாயனார்**

**"மாறில் பெருஞ் செல்வத்தின் வளம் பெருக மற்றதெலாம்**
**ஆறுலவும் சடைக் கற்றை அந்தணர்தம் அடியாராம்**
**ஈறில் பெருந் திருவுடையார் உடையார் என்று யாவையும் நேர்**
**கூறுவதன் முன் அவர்தான் குறிப்பறிந்து கொடுத்துள்ளார்"[2]**

மானக்கஞ்சாற நாயனார் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். கஞ்சாறு என்னும் வளம் மிகுந்த ஊரிலே இவர் பிறந்தார். அவர் அவதரித்த குடி பரம்பரையாக அரசர்க்குச் சேனாதிபதிப் பதவி வகிக்கும் குடி ஆகும். வேளாண்மையால் விளைந்த செல்வவளம் பெருகியவராயுமிருந்தார், மானக்கஞ்சாறர் மெய்ப்பொருளை அறிந்துணந்தவர், பணிவுடையவர், தான் சிவபெருமானுக்கு ஆளாகும் பேறு பெற்ற சிவனடியார் எனத் தெரிந்து கொண்டவர், தான் ஈட்டிய பெரும்பொருளெல்லாம் சிவனடியார்குரியன எனும் தெளிவால் சிவனடியார் வேண்டுபவற்றை அவர் வேண்டுமுன் குறிப்பறிந்து கொடுப்பவர்.

**மகப்பேறு வேண்டல் மற்றும் பெண் மகவைப் பெறுதல்**

**"அறியறியா மலர்க் கழல்கள் அறியாமை அறியாதார்**
**வருமகவு பெறல் பொருட்டு மனத்தருளால் வழுத்தினார்"[3]**

இப்பரந்து விரிந்த இவ்வுலகத்தில் சிவனடியார்களின் அடியவர்கள் தம் எண்ணத்தைத் தெரிவிக்கும் முன்னரே குறிப்பறிந்து போற்றும் செயலைச் செய்து வந்த கஞ்சனாறுக்கு குறை ஒன்று இருந்தது. நாயனார்க்குச் சிலகாலமாக புத்திரப் பேறு இன்மையால்புத்திர பேறு வேண்டி மனதில் திருவருள் தூண்ட சிவபெருமானைத் துதித்தார். மகப்பேறு இன்றி தவித்த மானகஞ்சாறனார் மனைவி ஒரு பெண் மகளைச் சிவனருளால் பெற்றெடுத்தாள். மகளைப் பெரும் மகிழ்ச்சியுடன் போற்றி அறநெறியில் கணவனும் மனைவியும் வளர்த்து வந்தனர்.

மகள் மணப்பருவம் அடைதல்

**"நறுமுகை மென் கொடி மருங்குல் நளிர்ச் சுருள் அந்தளிர் செங்கை**
**மறுவில் கொழுந்தினுக்கு மணப் பருவம் வந்தணைய"[4]**

குழந்தை காப்பு அணியும் இளம்பருவத்தைக் கடந்து, கூந்தல் வளர்ச்சியுடன் மணிமேகலை, சிற்றாடை அணியும் பருவம் எய்தி, ஒய்யாரமாக மென்னடை பயிலும் பருவம் அடைந்தது. தோழிமாருடன் மலர்களைப் பறித்தும், சிற்றில் இழைத்தும், சிலம்பொலி இசைப்பக் குழந்தை விளையாடியது. பின்னர் முலைமொட்டு மலரும் பருவம் அடைந்தது. பிறகு கவினழகு புக்கும் கட்டுடல், இடை தளரும் முலை, முத்தழகு கொண்ட புன்னகை, கொடி போன்ற இடை ஆகியவற்றுடன் மணப்பருவம் பெற்று அவள் திகழ்ந்தாள்.

**திருமண நாள் வந்தது**

**"கஞ்சாறர் மகள் கொடுப்பக் கைப் பிடிக்க வருகின்ற**

***எஞ்சாத புகழ்ப் பெருமை ஏயர் குலப் பெருமானும்***
***தஞ்சால்பு நிறை சுற்றம் தலை நிறைய முரசு இயம்ப***
***மஞ்சாலும் மலர்ச் சோலைக் கஞ்ச ாற்றின் மருங்கணைய"***[5]

திருமகளுக்கும் மேம்பட்ட அழகி மானக்கஞ்சாறர் மகள். அவளுக்கு உறவுக்காரன் ஏயர் என்னும் மகன். அவனுக்கு மணம் பேச முதியோர் வந்தனர். மானக்கஞ்சாறர் மகளை மணம் செய்து தர ஒப்புக்கொண்டார். மானக்கஞ்சாறர் ஒப்புக்கொண்டதை ஏயர் கோனார் விரும்பி இருவீட்டாரும் திருமணத்துக்கு நாள் குறித்தனர். மணமகள் வீட்டில் திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டது. உறவினர்கள் மகிழ்வுடன் மணமகள் வீட்டுக்கு வந்தனர். அழகிய கலங்களில் முளைப்பாலிகை வளர்க்கப்பட்டது. மணப்பந்தல் போடப்பட்டது. மணமகன் ஏயர் கோன் பெருமான் சுற்றத்தாருடன் கஞ்சாறு ஊரிலுள்ள பெண்வீட்டுக்கு வந்திருந்தான். வீடே மணக்கோலம் பூண்டிருந்தது.

### சிவபெருமானின் சோதனை

***"பொடி மூடு தழல் என்னத் திரு மேனி தனிற்பொலிந்த***
***படி நீடு திருநீற்றின் பரப்பணிந்த பான்மையராய்க்***
***கொடு நீடு மறுகு அணைந்து தம்முடைய குளிர் கமலத்து***
***அடி நீடும் மனத்து அன்பர் தம் மனையின் அகம் புகுந்தார்"***[6]

மனக்கஞ்சாறனாரின் சிவபத்தியை வெளிப்படுத்த எண்ணிச் சிவபெருமான் அவர், இல்லத்துக்கு வந்தார். நெற்றிக்கு மேல் முடிந்த சடைமுடி, காதில் குண்டலம் அணிந்துகொண்டு வந்தார். எலும்பு மாலை, தோளில் பாம்பு மாலையை நீக்கி விட்டு பட்டைக்கறைத் துண்டு, புணூல், திருநீறு புசிய உடலுடன் ஆகியவற்றுடன் வந்தார். ஒரு கையில் மணிமாலை, கோவணத்துடன் கட்டிய திரு உடையம், திருவடியில் திகழும்பஞ்ச முத்திரையும்விளங்க ஈசன் தோன்றினார். நீறு புத்த நெருப்பு போன்ற மேனியுடன் மானக்கஞ்சாறர் மனைக்கு வந்தார்.

### மகள் கூந்தலை அறுத்து மூனிவருக்குத் தரல்

***"அருள் செய்த மொழி கேளா அடல் சுரிகைதனை உருவிப்***
***பொருள் செய்தாம் எனப் பெற்றேன் எனக் கொண்டு புங்கொடி தன்***
***இருள் செய்த கருங்கூந்தல் அடியில் அரிந்து எதிர் நின்ற***
***மருள் செய்த பிறப்பு அறுப்பார் மலர்க் கரத்தினிடை நீட்ட"***[7]

சிவன் முனிவர் கோலத்தில் மானக்கஞ்சாறர் இல்லத்துக்கு வந்தார். வந்த முனிவரைக் கண்டு மானக்கஞ்சாறர் எழுந்து வரவேற்றார். முனிவரீர் எம் இல்லம் வர அடியேன் என்ன பேறு பெற்றேனோ என்று கூறிப் பணிந்தார். மானக்கஞ்சாறர் உள்ளே சென்று மகளை அழைத்துவந்தார். மகளையும் பணியும்படிச் செய்தார். பணிந்து எழுந்த பெண்ணைப் பார்த்து இவள் கூந்தல் என் பஞ்சவடிக்கு உதவும் என்று முனிவர் மானக்கஞ்சாறரிடம் கூறினார். பஞ்ச வடி என்பது ஆலமரம். ஆலம்விழுது போன்ற சடைமுடிக்கும் பஞ்சவடி என்று பெயர். இதைக் கேட்ட மானக்கஞ்சனார் சற்றும் தாமதிக்காமல் தன் வாளை உருவி மணமகள் கோலத்தில் இருந்த தன் மகளின் கூந்தலை அடியோடு அறுத்து முனிவர் கைகளில் நீட்டினார்.

### சிவபெருமான் திருவருள்

***"மருங்கு பெருங்கண நாதர் போற்றிசைப்ப வானவர்கள்***
***நெருங்க விடை மேல் கொண்டு நின்றவர் முன் நின்றவர்தாம்***

**ஒருங்கிய நெஞ்சொடு கரங்கள் உச்சியின் மேல் குவித்தையர்**
**பெருங் கருணைத் திறம் போற்றும் பெரும் பேறு நேர் பெற்றார்"[8]**

மானக்கஞ்சாறர் செயலைக் கண்ட முனிவர் திடீரென மறைந்தார். பின்னர் அம்மையப்பராக காளைமேல் காட்சி தந்தார். மானக்கஞ்சாறர் தொழுது அவர் காலடியில் விழுந்தார். சிவபெருமான் மானக்கஞ்சாறரின் பக்தி திறத்தை கண்டு வியந்து அவருக்கு கயிலாயத்தில் இடமளித்தார். மானக்கஞ்சாறர் தலைமேல் கை கூப்பி வணங்கினார். தொண்டர் வணங்க, சிவபெருமான் மறைந்தார். மகள் திருமணத்தைக் காண கலிக்காமர் என்னும் தொண்டர் வந்தார். ஏயர் குல மன்னவனான கலிக்காமர் மானக்கஞ்சாறர் தொண்டினைக் கேட்டார். பின்னர் அறுபட்ட கூந்தல் வளர்ந்தது. திருமணம் நடைபெற்றது. மணமகளைத் தன் ஊருக்கு அழைத்துச் சென்றார், ஏயர் கோமான் கலிகாமர்.

## தொகுப்புரை

சைவம் தமிழகத்தின் தொன்மை சமயமாகும்.

தமிழகத்திலே சைவத்தையும் தமிழையும் வளர்த்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் அறுபத்துமூன்று நாயன்மார்களாவர்

நாயன்மார்கள் தனக்கென யாதும் வேண்டாதவர்கள் சிவபெருமான் கொடுத்த சோதனைகளை தாண்டி தனக்கு இறையருள் ஒன்றே போதும் என்று எண்ணக்கூடிய அடியவர்கள்.

மானக்கஞ்சாற நாயனார் தான் ஈட்டிய பெரும்பொருளெல்லாம் சிவனடியார்குரியன எனும் தெளிவால் சிவனடியார் வேண்டுபவற்றை அவர் வேண்டுமுன் குறிப்பறிந்து கொடுக்கும் மனம் உடையவர்.

மானக்கஞ்சாற நாயனார் சிவபெருமானின் மீது அளவு கடந்த பக்தி கொண்டவர் என்பது அவரது செயல்பாடுகளின் மூலம் தெரிகிறது.

சிவனடியவருக்காக திருமணக் கோலத்தில் இருந்த தன் மகளின் கூந்தலை வாளால் வெட்டிக் கொடுத்ததன் மூலம் அவரது சிந்தையில், அவரது மூச்சாக இருப்பவர் சிவபெருமானே என்பதை அறிய முடிகிறது.

சிவபெருமான் மானக்கஞ்சாறரின் பக்தி திறத்தை கண்டு, அவருக்கு காட்சியளித்ததோடு கயிலாயத்தில் இடமும் அளித்தார்.

## அடிக்குறிப்புகள்

1. பெரியபுராணம் பாடல் எண், 871
2. பெரியபுராணம் பாடல் எண், 879
3. பெரியபுராணம் பாடல் எண்,880
4. பெரியபுராணம் பாடல் எண்,885
5. பெரியபுராணம் பாடல் எண், 890
6. பெரியபுராணம் பாடல் எண், 895
7. பெரியபுராணம் பாடல் எண், 900
8. பெரியபுராணம் பாடல் எண், 903

## துணை நூற்பட்டியல்


1. சேக்கிழார், பெரியபுராணம், குக ஸ்ரீ வாரியார் பதிப்பகம் சென்னை.
2. பானுமதி ரமேஷ், சைவ வளர்த்த தமிழ், நியூ சென்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2011.
3. நடராஜன் பி.ரா. திருஞானசம்பந்தர், வாமிகள் தேவாரம், மூன்றாம் பகுதி, உமா பதிப்பகம், சென்னை, 2010.